


முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.09.2025) காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கே.எம்.ராம்பிரசாத் அவர்கள் விபத்தில் மறைவுற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி திருமதி. ஆர்.லாவண்யா அவர்களுக்கு தி.மு.க. சார்பில் ரூ.10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். உடன் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.,அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, எம்.பி., அந்தியூர் செல்வராஜ், எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கூடுவாஞ்சேரி நகரச்செயலாளர் எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.09.2025) கடலூர் மேற்கு மாவட்டம் குப்புசாமி அவர்கள் விபத்தில் மறைவுற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி திருமதி. கே.சரண்யா அவர்களுக்கு தி.மு.க. சார்பில் ரூ.10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். உடன் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, எம்.பி., அந்தியூர் செல்வராஜ், எம்.பி., கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன், நெய்வேலி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சபா.ராஜேந்திரன், எம்.எல்.ஏ., செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் குணசேகரன் உள்ளனர்.

### மதுரையில் கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, சாலை விபத்தில் மரணமடைந்த

# மூன்று கழகத்தினரின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ. 30 லட்சம் குடும்ப நிதி !

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. சார்பில் வழங்கினார்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம (23.09.2025) திருவாரூர் மாவட்டம் எம்.விக்னேஷ் அவர்கள் விபத்தில் மறைவுற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி திருமதி. ஜாய்எப்சியா அவர்களுக்கு தி.மு.க. சார்பில் ரூ.10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். உடன் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், நீடாமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.வி.கே.ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.

சென்னை, செப்.25-

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திருவாரூர் மாவட்டம் எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டம் குப்புசாமி மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கே.ஏ.ராம்பிரசாத் ஆகிய மூன்று குடும்பத்திற்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 30 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 6 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.60 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச்சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், கடந்த 2.8.2025 அன்று விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - 12.6.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்செல்வன் - 23.7.2025 அன்று ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் ஆகியோர் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து, 5.6.2025 அன்று திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான எம்.விக்னேஷ் அவர்கள், திருவாரூர் - கும்பகோணம் மெயின் ரோடு, வடகண்டம் ரைஸ்மில் வளைவில், வாகன விபத்தில் சிக்கியும் 5.6.2025 அன்று கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான குப்புசாமி அவர்கள், கும்பகோணம் - சென்னை சாலையில் கீழ்வடக்குத்து தவபாலன் வீட்டின் எதிர் சாலையில் வாகன விபத்தில் சிக்கியும் - 23.7.2025 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கே.ஏ.ராம்பிரசாத் அவர்கள், ஜி.எஸ்.டி சாலை சீனிவாசபுரம் சிக்னலில் எஸ்.பி.ஐ வங்கி ஏ.டி.எம். வாசலில் நின்றிருந்தபோது அரசுப் பேருந்து மோதியும் சம்பவ இடத்தி மூவரின் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் பத்து இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூபாய் 30 இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், திருவாரூர் மாவட்டம் எம்.விக்னேஷ் அவர்களின் மனைவி திருமதி ஜாய்எப்சியா அவர்களிடமும்- கடலூர் மேற்கு மாவட்டம், குப்பு சாமி அவர்களின் மனைவி கே.சரண்யா அவர்களிடமும் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கே.எம்.ராம் பிரசாத் அவர்களின் மனைவி திருமதி ஆர்.லாவண்யா அவர்களிடமும் நேற்று (23.09 .2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி சிவா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், அண்ணா அறிவாலய மேலாளர் பத்மநாபன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், நெய்வேலி சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி, பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், நீடாமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.வி.கே.ஆனந்த், குறிஞ்சிப் பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - முப்பெரும் விழாவில் விருது பெற்ற

# கனிமொழி கருணாநிதி எம்.பி. - சோ.மா.ராமச்சந்திரன் விருதுக்காகப் பெற்ற தொகையினை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினர்!



சென்னை, செப். 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தி.மு.க. முப்பெரும் விழாவில் 'பெரியார் விருது'க்காக பெற்ற தொகையினை கனிமொழி கருணாநிதி, எம்.பி., 'கலைஞர் விருது'க்காக பெற்ற தொகையினை சோ.மா.ராமச்சந்திரன் கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினர்.

கரூரில் 17.9.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முப்பெரும் விழா விருதுகள் வழங்கினார்.

பெரியார் விருது பெற்ற துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., மற்றும் கலைஞர் விருது பெற்ற கழக மூத்த முன்னோடி சோ.மா.ராமச்சந்திரன் ஆகியோர் விருதுக்காக, தங்களுக்கு கிடைத்த தொகையான தலா ரூபாய் மூன்று லட்சத்தினை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்குவதாக விழா மேடையிலேயே அறிவித்திதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (23.09.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களிடம் தங்களுக்கு வழங்கப்பட்ட விருதுக்கான தொகையான தலா ரூபாய் மூன்று லட்சத்திற்கான காசோலையினை கழக வளர்ச்சி நிதிக்கென வழங்கினார்கள்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சந்தித்து தனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட நவல்பட்டு கிராம சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில், அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்தவும், பொன்மலை பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை மனு அளித்தார்.



சேலம் மாவட்டம் அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றியம் மாசிநாயக்கன்பட்டி ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ.விஜயகுமார் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆணையை வழங்கினார். இம்முகாமில் பேரூர் செயலாளர் பாபு மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.